Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165177

1. District : திருப்பூர் மாவட்டம் | PS: மாநகர மத்திய காவல்நிலையம் திருப்பூர் | Year: ஆண்டு | FIR No.: 04/Acl 2025/TPR முத.அ. எண் | Date: நாள் 01.05.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 r/w Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 106
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 30.04.2025 | Date to : நாள் வரை 15.55 மணிமுதல்
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.05.2025 | Time : நேரம் காலை 10.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : ✓
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 கி.மி. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், காங்கயம், திருப்பூர் DT.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N.K. ஜெயச் சந்திரன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் N.K. கொழந்தசாமி.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 07.03.1971 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காலம் சென்றவர் | (g) Address : முகவரி உழவர் திருப்பூர் மற்றும் கண்காணிப்பு பதிவு, திருப்பூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திருமதி. எஸ். உமாமகேஸ்வரி, சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், காங்கயம், திருப்பூர் மாவட்டம் மற்றும் 2 நபர்கள் (விபரம் தகவல் தாக்கீதில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form 91 நாள் 01-05-2025 -ன் கீழ் அனுப்ப கையெழுத்து

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

வெயர் நெகிழ்வாகவே இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

01/05/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

01/05/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01-05-2025 அன்று 12.00 மணி

Name: பெயர் N.K. Rajchandran
Rank: நிலை Deputy Superintendent of Police
O/O AC. Tiruppur

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2025/TPR, u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் –7 இன் தொடர்ச்சி.,

எதிரிகளின் பட்டியல்

1) திருமதி.M.உமாமகேஸ்வரி, (50/25), க/பெ.தங்கராஜ், சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், தாராபுரம், திருப்பூர் மாவட்டம். (இருப்பிட முகவரி: கதவு எண்.4/19, K.M.பாளையம், பொங்கலூர், திருப்பூர் 641667.)

2) திரு.R.முத்துசாமி, (50/25), த/பெ.ராமசாமி, கதவு எண். 3/48, கிழக்கு வீதி, அலங்கியம் கிராமம், தாராபுரம் தாலுகா, திருப்பூர் மாவட்டம்.

3) திரு.G.நடராஜன், (44/25), த/பெ.கணேசன், கதவு எண். 9/24, மேற்கு வீதி, அலங்கியம். தாராபுரம் தாலுகா, திருப்பூர் மாவட்டம்.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2025/TPR, u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் –12 இன் விபரம்.,

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் 30.04.2025 ஆம் தேதி புதன் கிழமை 15.55 மணி முதல் 01.05.2025 ம் தேதி 02.30 மணிவரை திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பைபாஸ்ரோடு, ஐ.டி.ஐ கார்னர், நஞ்சியம்பாளையத்தில் அமைந்துள்ள தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தீவீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 01.05.2025 ம் தேதி வியாழக்கிழமை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2025 u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாராபுரம் சார்பதிவாளர் மற்றும் அவருடைய அலுவலர்கள் பத்திரப்பதிவு, வில்லங்க சான்று அளித்தல், பத்திர நகல் அளித்தல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள், பத்திர எழுத்தர்கள் மூலமாகவும், அலுவலக நேரத்திலும் அதற்கு பின்னரும் 30.04.2025 ஆம் தேதியன்று கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பைபாஸ்ரோடு, ஐ.டி.ஐ கார்னர், நஞ்சியம்பாளையத்தில் அமைந்துள்ள தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் காவல் துணைக்

கண்காணிப்பாளராகிய நான் அரசு சாட்சிகள் 1) திரு. கே. நாகரத்தினம், பல்லடம் நகராட்சி மேலாளர் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாவட்டம் மற்றும் 2) திரு. ரா. தங்கவேலு அவினாசி ஊராட்சி ஒன்றிய மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், அவினாசி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவினருடன் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 30.04.2025 ஆம் தேதி 15.55 மணிக்கு தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தின் வெளிப்பகுதி, தரைதளத்தில் உள்ள வராண்டா, சார்பதிவாளர் அறை, உதவியாளர் அறை, கணினி அறை அலுவலர்கள் அறைகளில் உள்ள யாரும் வெளியே செல்லாமால் காவலர்கள் மூலம் காப்பு போடப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே நுழைந்ததும் பார்வையாளர்கள் அறையை அடுத்து உள்ள அறையில் மேற்கு பக்க சுவர் ஓரமாக கிழக்கு நோக்கி சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் காவல் துணைக் கண்காணிப்பாளராகிய என்னையும் மற்றும் என்னுடன் வந்திருந்த குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு, சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்ய நாங்கள் வந்திருப்பதாக தெரிவித்து, அவரிடம் விசாரிக்க அவர் தனது பெயர் எம். உமாமகேஸ்வரி என்றும், தான் சார்பதிவாளராக கடந்த 03.02.2025 ஆம் தேதிமுதல் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். தனது பணிகள் ஆவணப்பதிவு செய்தல், பதிவு தொடர்பான கள ஆய்வு, திருமணப் பதிவு செய்தல், பிறப்பு இறப்பு சான்று வழங்குதல், நகல் வில்லங்க சான்று வழங்குதல், போன்றவைகள் தனது முக்கியமான பணிகள் என்று தெரிவித்தார். அப்போது தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர்கள் திருமதி. ச. வஜிரா, திருமதி. சே. ரஜப் சுல்தானா, ஆகியோர் பணியில் இருப்பதாகவும், உதவியாளர்கள் திரு. அ. ஞானசேகரன் மற்றும் திரு. சா. பசுபதி ஆகியோர் மதிய உணவிற்கு சென்றவர்கள் திரும்பி வரவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் தகவல் தொகுப்பு பணியாளர் பிரிவில் அமுதா, சகிலாபானு மற்றும் சித்ரா ஆகியோர் பணியில் இருப்பதாக தெரிவித்தார். அனைத்து அலுவலர்களும் அவரவர் இருக்கையில் அமர வைக்கப்பட்டனர். அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர்கள் / புரோக்கர்கள் ஆகியோர் அடையாளம் காணப்பட்டு அறையில் அமர வைக்கப்பட்டனர்.

அலுவலகத்தில் இருந்த மற்ற பொதுமக்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு சந்தேகப்படும்படியாக தொகை எதுவும் வைத்திருக்காதவர்கள் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டனர். சார்பதிவாளரிடம் அன்றைய தினம் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகை விபரங்கள் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு அவர் 30.04.2025 ஆம் தேதி ஆவண எண்கள். 3691/25 முதல் 3749/25 முடிய 59 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 30.04.2025 ஆம் தேதி "A" கணக்கில் ரூ.9,25,727/– ம், டி கணக்கில் ரூ.3,485/–, குறுந்தகடு

ரூ.5,900/–, உட்பிரிவு ரூ.16,800/– இ.மு.ச.பிரிவு 41 ரூ.21,10,136/– ஆக மொத்தம் ரூ.30,63,048/– ஆன்லைன் முலமாக வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். மேற்படி தொகைகளுக்கு உண்டான இரசீதுகளுடன் ஒப்பிட்டு பார்க்கையில் சரியாக இருந்தது. மேலும் நிலையான முன்பணம் பதிவேட்டை பார்வையிட்டதில் அதில் ரூ. 150/– பதிவு இருந்தது. அந்த தொகை பற்றி கேட்டபோது அது ஒரு சுருக்குப்பையில் வைக்கப்பட்டு பதிவறையில் உள்ளதாக தெரிவித்தார். அந்த சுருக்குப்பையை எடுத்துவரச்செய்து சோதனை செய்ததில் அதில் ஒரு கவரில் ரூ.250/– என எழுதி இரண்டு நூறுருபாய் நோட்டுக்கள் மற்றும் ஒரு ஐம்பது ரூபாய் நோட்டு ஆக மொத்தம் ரு.250/– இருந்தது. அது பற்றி கேட்டபோது நிலையான முன்பண பதிவேட்டில் ரூ.250/– க்கு பதிலாக ரூ.150/– எழுதப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். அந்தப் பதிவேடானது 24.04.2025 க்குப் பின்னர் எழுதப்படவில்லை. பராமரிக்கப்படவில்லை. மேற்படி நிலையான முன்பணம் சார்பதிவாளர் அவர்களிடம் சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் தாராபுரம் சார்பதிவாளரின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் காணப்படவில்லை. பின்னர் சார்பதிவாளர் திருமதி. எம். உமாமகேஸ்வரி அவர்களிடம் பெண் ஆய்வாளர் முலமாக சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் காணப்படவில்லை. மேலும் அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த பணம் ரூ.4,680/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.18 தனிநபர் கையிருப்பு பதிவேடு காலம் 01.01.2025 முதல், சார்பதிவாளர் அலுவலகம், தாராபுரம் என்ற பதிவேட்டில் பதிவு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்து அந்த பதிவேட்டை எடுத்துவரச்செய்து ஆஜர்படுத்தினார். அதை பார்வையிட்டபோது அது பக்கம் 1 முதல் 100 முடிய உள்ளதாக இருந்தது. அதில் பக்கம் 42 ல் 30.04.25 ஆம் தேதியில் கையிருப்பு தொகை காலத்தில் ரூ.4,680/– என பதிந்து பணியாளர் கையொப்பம் என்ற காலத்தில் சுருக்கொப்பம் செய்யப்பட்டுள்ளது. சார்பதிவாளரிடம் அந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தனது கைப்பையில் இருந்து ரூ.984/– இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். மீதி தொகை பற்றி கேட்டபோது செலவு தொகை பற்றி சரியான விளக்கம் எதுவும் கூறவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திருமதி. ரஜப் சுல்தானா என்பவரை விசாரித்து அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் தன்னிடம் ரூ.53/– உள்ளதாக தெரிவித்தார். மேலும் அவர் தான் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இளநிலை உதவியாளராக தொடர்ந்து பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ. 90/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.18 தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். தொகை

வித்தியாசம் உள்ளது பற்றி கேட்டபோது மதியம் உணவிற்காக செலவு செய்து விட்டதாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.53/ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திருமதி. ச. வஜிரா என்பவரை விசாரித்தபோது அவரிடம் ரூ.150/ காணப்பட்டது. அவரை விசாரித்ததில் அன்று காலை அலுவலகம் வந்தபோது சொந்த பணம் ரூ.150/– கொண்டு வந்திருந்ததாகவும், அதை தொகுதி எண்.18 தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு மேற்கொண்டு அந்த பணத்தை தான் வைத்திருப்பதாக தெரிவித்தார். அதை சரிபார்த்தபோது அந்தப்பணம் குறித்த பதிவு சரியாக இருந்ததால் அந்தப்பணம் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் தான் 17.12.2020 ஆம் தேதி முதல் தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவருடைய இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ அல்லது பொருளோ ஏதும் காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி. ஜி. சகிலாபானு அவர்களை விசாரித்து அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தன்னிடம் ரூ.370/– உள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் தான் ஒரு நிரந்தர பணியாளராக இல்லாத காரணத்தால் தன்னிடம் இருந்த தொகையை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள வில்லை என்று தெரிவித்தார். அவரது இருக்கையில் சோதனை மேற்கொண்டபோது அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி. ரா. அமுதா அவர்களை விசாரித்து அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தன்னிடம் ரூ.850/– உள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் வீட்டிற்கு திரும்பி செல்லும்போது மருந்துகள் வாங்குவதற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் தான் ஒரு நிரந்தர பணியாளராக இல்லாத காரணத்தால் தன்னிடம் இருந்த தொகையை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள வில்லை என்று தெரிவித்தார். அவரது இருக்கையில் சோதனை மேற்கொண்டபோது அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. அதன் பின்னர் அலுவலகத்தில் பணிபுரியும் தகவல் தொகுப்பு பணியாளர்

திருமதி. செ. சித்ராதேவி அவர்களை விசாரித்து அவர் வைத்திருந்த தொகை பற்றி கேட்டபோது அவர் தன்னிடம் ரூ.800/– உள்ளதாக தெரிவித்து அந்த பணத்தை ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தான் ஒரு சிறிய அளவிலான செல்போன் வாங்குவற்காக வைத்துள்ளதாக தெரிவித்த காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த தொகை அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் தான் ஒரு நிரந்தர பணியாளராக இல்லாத காரணத்தால் தன்னிடம் இருந்த தொகையை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள வில்லை என்று தெரிவித்தார். அவரது இருக்கையில் சோதனை மேற்கொண்டபோது அங்கு பணமோ பொருளோ எதுவும் காணப்படவில்லை. மேலும் சார்பதிவாளர் அறை, உதவியாளர் திரு. ஞானசேகரன் பயன்படுத்தும் அறை, தகவல் தொகுப்பு பணியாளர்கள் பயன்படுத்தும் அறை ஆகியவற்றை அரசு சாட்சிகள் மற்றும் சார்பதிவாளர் ஆகியோர் முன்னிலையில் சோதனை மேற்கொண்டபோது அங்கு பணமோ பொருளோ எதுவும் காணப்படவில்லை. அதன் பின்னர் சார்பதிவாளர் அறைக்கு முன்புறமுள்ள ஏற்கனவே காவல் போடப்பட்ட அறையினை சோதனை செய்தபோது அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. வரவேற்பாளர் அறைக்கு தெற்கு பக்கம் கிழக்கு பார்த்தவாறு உள்ள மாற்றுத் திறனாளிகள் கழிப்பறை, ஆண்கள் கழிப்பறை என்ற பெயர் பலகை பொருத்தப்பட்டு கழிவரையின் உள்ளே மேற்கு பக்க சுவர் ஓரமாக கிழக்கு பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ள வெஸ்டர்ன் டாய்லெட்டின் மேல் பகுதியில் சுவரை ஒட்டியவாறு பொருத்தப்பட்டுள்ள லைட் சேண்டல் கலரில் உள்ள Parryware. Slimline, water flush out tank உள்பகுதியில் ஒரு பாலிதீன் கவரில் சுற்றப்பட்ட நிலையில் 500 ரூபாய் நோட்டுக்கள் கற்றைகளாக காணப்பட்டது. அந்த தொகையை சாட்சிகள் மற்றும் சார்பதிவாளர் முன்னிலையில் எடுத்து பார்த்தபோது அதில் ஆறு ஐநூறு ரூபாய் கட்டுக்கள் இருந்தது. அதில் (1) முதலாவது கட்டில் இருந்த தொகையை எண்ணிப்பார்த்தபோது 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ. 50,000/–மும், (2) இரண்டாவது கட்டில் இருந்த தொகையை எண்ணிப்பார்த்தபோது 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ. 50,000/–மும், (3) முன்றாவது கட்டில் இருந்த தொகையை எண்ணிப்பார்த்தபோது 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ. 50,000/–மும், (4) நான்காவது கட்டில் இருந்த தொகையை எண்ணிப்பார்த்தபோது 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ. 50,000/–மும், (5) ஐந்தாவது கட்டில் இருந்த தொகையை எண்ணிப்பார்த்தபோது 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ. 50,000/–மும் மற்றும் (6) ஆறாவது கட்டில் இருந்த தொகையை எண்ணிப்பார்த்தபோது 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ. 50,000/–மும் ஆக மொத்தம் ரூ.3,00,000/– இருந்தது. அந்த தொகை பற்றி சார்பதிவாளரிடம் கேட்டபோது அந்த தொகை அங்கு எப்படி வந்தது என்று தனக்கு

தெரியவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் அப்பொழுது அந்த வரவேற்பு அறை மற்றும் அலுவலகத்தில் இருந்த பத்திர பதிவிற்கு வந்திருந்தவர்களிடமும் மற்றும் அலுவலத்தில் பணியில் இருந்த மற்ற பணியாளர்களிடமும் அந்த தொகை பற்றி கேட்டபோது யாரும் அந்த தொகை பற்றி உரிமை கோரவில்லை. எனவே அந்த உரிமை கோரப்படாத தொகை ரூ.3,00,000/– மும் விசாரணைக்காக சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் வருகைப்பதிவேடு பக்கம் 7 யை பார்வையிட்டபோது அதில் சார்பதிவாளர் திருமதி. எம். உமாமகேஸ்வரி, உதவியாளர்கள் திரு. அ. ஞானசேகரன், திரு. சா. பசுபதி, இளநிலை உதவியாளர்கள் திருமதி. ச. வஜிரா மற்றும் திருமதி. சே. ரஜப் சுல்தானா ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். அலுவலகத்தில் ஆஜரில் இல்லாத திரு. அ. ஞானசேகரன் பற்றி சார்பதிவாளரிடம் கேட்டபோது அவர்கள் மதிய உணவிற்கு சென்றுவிட்டு இன்னும் அலுவலகம் திரும்பவில்லை என்றும் தெரிவித்தார். அவர்களை தொடர்புகொண்டு அலுவலகம் வராதது பற்றி கேட்குமாறு சார்பதிவாளரிடம் கூறியபோது சார்பதிவாளர் அவர்கள் தனது செல்போன் எண். 94432 53659 என்ற எண்ணிலிருந்து திரு. ஞானசேகரன் அவர்களின் 93642 22677 என்ற செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டு ஸ்பீக்கர் மோடில் சாட்சிகள் முன்னிலையில் பேசியபோது அவர் தான் மதியம் அலுவலகம் வந்ததாகவும் அப்போது அலுவலகம் உட்புறமாக பூட்டியிருந்ததால் தான் திரும்பி வந்துவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும் திரு. பசுபதி என்பவர் மதியத்திற்கு மேல் ஒரு நிகழ்ச்சிக்கு செல்ல இருப்பதாக அனுமதி வேண்டினார் என்றும் ஆனால் தான் அலுவலகம் வந்து சில வேலைகளை முடித்து விட்டுச் செல்லுமாறு தெரிவித்திருந்தபோதும் அவர் மதியத்திற்கு மேல் அலுவலகம் வரவில்லை என்று தெரிவித்தார். அவரையும் செல்போனில் தொடர்பு கொள்ளுமாறு சார்பதிவாளரிடம் கூறியபோது சார்பதிவாளர் அவர்கள் தனது செல்போன் எண். 94432 53659 என்ற எண்ணிலிருந்து திரு. பசுபதி அவர்களின் 73736 57087 என்ற செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டு ஸ்பீக்கர் மோடில் சாட்சிகள் முன்னிலையில் அழைத்தபோது அவர் தான் ஏற்கனவே தங்களிடம் அனுமதி கேட்டதன் பேரில் ஒரு நிகழ்சிக்கு சென்றுவிட்டதாக தெரிவித்தார்.

பின்னர் திடீர் சோதனையின் தொடர்ச்சியாக சார்பதிவாளர் அலுவலகத்தின் கீழ்க்கண்ட ஆவணங்களை பார்வையிடப்பட்டது / கைப்பற்றப்பட்டது.

- தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம், வருகைப்பதிவேடு 01.01.2025 முதல் 30.4.2025 வரை தொகுதி எண்.120 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம் 7ல் ஏப்ரல் 2025 மாதத்திய வருகைபதிவேட்டில் சார்பதிவாளர் திருமதி. எம். உமா மகேஸ்வரி மற்றும் மற்றும் இதர

அலுவலர்கள் 30.04.2025 ஆம் தேதி சுருக்கொப்பங்கள் செய்துள்ளனர். மேற்படி ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

- Attendance Report -2025 DEO-IPCO, SRO Dharapuram வருகைப் பதிவேடு நாள் 01.01.2025 முதல் 30.04.2025 வரை பார்வையிடப்பட்டது. அதில் ஏப்ரல் 2025 மாதத்திய வருகை பதிவேட்டில் பணியாளர்கள் ஜி. ஷகிலாபானு, ரா. அமுதா மற்றும் செ. சித்ராதேவி ஆகியோர் 30.04.2025 ஆம் தேதி சுருக்கொப்பம் செய்துள்ளனர். மேற்படி ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

- தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம், தனிநபர் கையிருப்பு பதிவேடு நாள் 01.01.2025 முதல், தொகுதி எண். 18 பார்வையிடப்பட்டது. அதில் பக்கம் 42 ல் 30.04.2025 ஆம் தேதி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
- தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம், மதிப்பு நிர்ணயப்பதிவேடு மனை பிரிவுகளுக்கு நாள் 02.01.2024 முதல் 11.04.2025 வரை தொகுதி எண். 3 பார்வையிடப்பட்டது. அதில் ஏப்ரல் 2025 வரை சான்று செய்யப்பட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
- தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம், மதிப்பு நிர்ணயப்பதிவேடு தனி மனை நாள் 02.01.2024 முதல் 24.03.2025 வரை தொகுதி எண். 3 பார்வையிடப்பட்டது. அதில் ஏப்ரல் 2025 வரை சான்று செய்யப்பட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
- கணியியில் பிரிண்ட் செய்யப்பட்ட "A" கணக்கு பார்வையிட்டதில் இன்றைய தினம் 30.04.2025 ஆம் தேதி ஆவண எண்கள். 3691/25 முதல் 3749/25 முடிய 59 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. பக்கம் 1 முதல் 8 முடிய கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட டி கணக்கு பட்டியலை பார்வையிட்டதில் இன்று 30.04.2025 ஆம் தேதி 4 வில்லங்க சான்றிதழ், இணைய வழி மற்றும் நேரடியாக மனு செய்த விவரங்கள் உள்ளது. பக்கம் 1 மற்றும் 2 முடிய உள்ளது கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட எச் கணக்கு பட்டியலை பார்வையிட்டதில் இன்று 30.04.2025 ஆம் தேதி "A" கணக்கில் ரூ.9,25,727/– ம், டி கணக்கில் ரூ.3,485/–, குறுந்தகடு ரூ.5,900/–, உட்பிரிவு ரூ.16,800/– இ.மு.ச.பிரிவு 41 ரூ.21,10,136/– மொத்தமாக ரூ.30,63,048/– ஆகும் பக்கம் 1 மற்றும் 2 விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட Sub Division Account கணக்கு பட்டியல் பக்கம் 1 முதல் 4 வரை விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.

- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட குறுந்தகடு கணக்கு பட்டியல் பக்கம் 1 முதல் 6 முடிய விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.
- கணினியில் பிரிண்ட் செய்யபட்ட ஆவண எழுத்தர் நல நிதி கணக்கு பட்டியல் பக்கம் 1 முதல் 10 முடிய விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.
- தன்பதிவேடு தொகுதி எண். 138 பார்வையிட்டேன். அப்பதிவேட்டில் பக்கம் 66 ல் வரிசை எண். 194 ல் நடப்பு எண்.194 என்று குறிப்பிட்டு இறுதியாக 12.04.25 தேதி குறிப்பிட்டு பதிவுகள் உள்ளது.
- நிலையான முன்பண பதிவேடு தொகுதி எண்.27, காலம் 01.01.2023 முதல் பார்வையிட்டேன். 24.04.2025 வரை எழுதப்பட்டுள்ளது. 25.04.2025 முதல் 30.04.2025 முடிய பதிவுகள் இல்லாமல் உள்ளது.

அதன் அச்சு நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் திருமதி. உமாமகேஸ்வரி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு தொடர் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட பதிவேடுகள் அனைத்தும் பார்வையிட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் மற்றும் சாட்சிகள் கையொப்பம் செய்தோம். மேலும் சார்பதிவாளர் அவர்களிடம் கொடிநாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்டபோது, ஆவண பதிவுக்கு வரும் பொதுமக்கள் நேரடியாக செலுத்துவதற்கு என்று www.flagday.gov.in என்ற இணையதளம் மூலமாக நேரடியாகச் செலுத்துவதால் தற்பொழுது தனியாக கொடிநாள் நிதி வசூலுக்கு என்று ஆவணங்கள் எதுவும் பராமரிக்கப்படுவதில்லை என்று தெரிவித்தார். அதன் பின்னர் சார்பதிவாளர் திருமதி உமா மகேஸ்வரி அவர்களை அழைத்துக் கொண்டு பார்வையாளர்கள் அறைக்கு செல்லப்பட்டது. அங்கு ஏற்கனவே அமர வைக்கப்பட்டிருந்தவர்களில் 1) ஒருவரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் Y.சந்திரசேகரன் என்றும் தான் தாராபுரம் போலீஸ் ஸ்டேசன் எதிரில் உள்ள சீனிவாசன் அட்வகேட் அலுவலகத்தில் குமாஸ்தாவாக பணிபுரிந்து வருவதாகவும் சீனிவாசன் அட்வகேட் சார்பாக பாலமுருகன் என்பவருக்கு பத்திர பதிவு செய்ய உதவியாக தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்க தனது பேண்டின் வலது பக்க பாக்கட்டில் இருந்து தொகையை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 3 நூறு ரூபாய் நோட்டுக்கள், 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 2 இருபது ரூபாய் நோட்டுக்கள் என மொத்தமாக ரூ.390 இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று

கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சாட்சிகள் முன்னிலையில் அந்த தொகை ரூ.390 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (2) அந்த வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் S.சரவணன் என்றும் தான் பாண்டியன் என்பவரிடம் இருந்து நாலரை செண்ட் காலியிடத்தை கிரையம் செய்வதற்காக தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் கூறினார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது இடது பேண்ட் பாக்கட்டில் இருந்து கத்தையாக பணம் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க அதில் 44 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 5 நூறு ரூபாய் நோட்டுக்கள், என மொத்தமாக ரூ.22,500 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அது கிரையம் செய்ததற்காக பாண்டியன் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மீதி தொகை என்று கூறிய அந்த காரணம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால் சாட்சிகள் முன்னிலையில் அந்த தொகை ரூ.22,500 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (3) வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் நடராஜன் என்றும் அவரது பெயரிலும் அவரது மனைவி தமிழ்செல்வி பெயரிலும் தாராபுரம், ஒட்டன்சத்திரம் ரோட்டில் எரகாம்பட்டி பிரிவில் உள்ள 42 ஏக்கர் பூமியை அவரது 2 மகன்கள் பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுப்பதற்காக தனது மனைவியுடன் வந்ததாகவும் கூறினார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது பேண்டின் வலதுபுற டிக்கர் பாக்கட்டில் இருந்து கத்தையாக ஐநூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்க அதில் 90 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. மேலும் அவரது பேண்டின் பின் பாக்கட்டில் இருந்து 11 இருநூறு ரூபாய் நோட்டுக்கள், 5 நூறு ரூபாய் நோட்டுக்கள், ஒரு 20 ரூபாய் நோட்டு மற்றும் ஒரு 10 ரூபாய் நோட்டு எடுத்து ஆஜர் செய்தார். மொத்தமாக அவரிடம் ரூ.47,730 இருந்தது. அந்த பணம் குறித்து விசாரிக்க தான் தாராபுரம் பொள்ளாச்சி ரோட்டில் ஸ்ரீவாரி என்ற பெயரில் சைட் போட்டுள்ளதாகவும் அங்கு வேலை செய்யும் ஆட்களுக்கு கூலி கொடுப்பதற்காக வைத்துள்ள பணம் என்று கூறினார். மேலும் தனது மனைவியிடம் ரூ.55,830/- உள்ளது என்றும், அந்த தொகை அட்சயதிதியை முன்னிட்டு தனது மனைவி நகை வாங்குதற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். (4) திரு. நடராஜன் அவர்களுடன் இருந்த பெண்ணை தனியாக அழைத்து விசாரித்தபோது அவர் தான் நடராஜன் அவர்களது மனைவி என்றும் தனது பெயர் தமிழ்செல்வி என்றும் கூறினார். மேலும் தனது பெயரிலும் அவரது கணவர் நடராஜன் பெயரிலும் தாராபுரம், ஒட்டன்சத்திரம் ரோட்டில் எரகாம்பட்டி பிரிவில் உள்ள 42

ஏக்கர் பூமியை தனது 2 மகன்கள் பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுப்பதற்காக தனது கணவருடன் வந்ததாகவும் கூறினார். மேற்படி அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது பிரவுன் நிற கைப்பையில் இருந்து கத்தையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 100 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.50,000/– மும், 11 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக 5,500/– ம் 4 ஐம்பது ரூபாய் நோட்டுக்கள், 6 இருபது ரூபாய் மற்றும் 1 பத்து ரூபாய் என மொத்தம் ரூ.55,830 இருந்தது. அந்த பணம் குறித்து விசாரித்தபோது தான் அட்சய திரிதியை முன்னிட்டு தங்கம் வாங்குவதற்காக வைத்துள்ள பணம் என்று கூறினார். திரு. நடராஜன் அவர்களும் அவரது மனைவி திருமதி. தமிழ்செல்வி அவர்களும் கூறிய காரணம் ஒன்றாக இருந்ததாலும் தொகை வைத்திருந்த விதம் சந்தேகப்படும்படியாக இல்லாததால் அந்த தொகை ரூ.47,730 மற்றும் ரூ.55,830 ஆகியவைகள் முறையே திரு. நடராஜன் மற்றும் திருமதி. தமிழ்செல்வி ஆகியோரிடம் சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. (5) மேலும் நடராஜன் அவர்கள் அருகில் நின்றிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் கணேசன் என்றும் நடராஜன் மற்றும் தமிழ்செல்வி ஆகியோர்கள் அவர்களது மகன்களுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் செய்வதற்கு சாட்சி கையொப்பம் செய்வதற்காக உடன் வந்ததாகவும் கூறினார். அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சட்டையின் வலது மேல் பாக்கட்டில் இருந்து 3 இருநூறு ரூபாய் நோட்டுக்கள், 15 நூறு ரூபாய் நோட்டுக்கள், ஒரு 50 ரூபாய் நோட்டு என மொத்தம் ரூ.2,150 ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகை குறித்து விசாரித்தபோது அந்த தொகை பால் விற்ற வகையில் பால் சொசைட்டியல் கொடுத்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால் சாட்சிகள் முன்னிலையில் அந்த தொகை ரூ.2,150 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (6) வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் பாண்டியன் என்றும் தான் சரவணன் என்பவருக்கு தனது காலி இடத்தை கிரையம் செய்து கொடுப்பதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் அணிந்திருந்த அண்டர்வேர் பாக்கட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 1 ஐநூறு ரூபாய் நோட்டு, 3 நூறு ரூபாய் நோட்டுக்கள், 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 இருபது ரூபாய் நோட்டு, 2 பத்து ரூபாய் நோட்டுக்கள் என மொத்தமாக ரூ.890 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் பூ வியாபாரம் செய்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள்

முன்னிலையில் அந்த பணம் ரூ.890 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (7) மேலும் வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் முத்து ராமசாமி என்றும் தான் சரவணன் என்பவர் கிரையம் செய்வதற்கு சாட்சி கையொப்பம் செய்வதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது வலது பேண்ட் பாக்கட் பர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 4 நூறு ரூபாய் நோட்டுக்கள், 1 ஐம்பது ரூபாய் நோட்டு, 1 பத்து ரூபாய் நோட்டு ஆக மொத்தமாக ரூ.460 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சொந்த செலவுக்காக வைத்திருந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.460 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (8) பின்னர் வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் தண்டபாணி என்றும் தான் சரவணன் என்பவர் கிரையம் செய்வதற்கு சாட்சி கையொப்பம் செய்வதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது வலது அண்டர்வேர் பாக்கட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 5 ஐநூறு ரூபாய் நோட்டு, 1 இருநூறு ரூபாய் நோட்டு, 3 நூறு ரூபாய் நோட்டுக்கள் 1 இருபது ரூபாய் நோட்டு என மொத்தமாக ரூ.3,020 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் சமையல் பாத்திரை கடை வைத்துள்ளதாகவும் அதில் வந்த வாடகை பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.3,020 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (9) வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் செல்வராஜ் என்றும் தான் ஸ்ரீராம் பைனான்சிற்கு MOD செய்து கொடுப்பதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் பணம் எதுவும் கொண்டு வரவில்லை என்று கூறினார். (10) அதன் பின்னர் வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் அருள்ஜோதி என்றும் தான் செல்வராஜ் என்பவர் ஸ்ரீராம் பைனான்சிற்கு MOD செய்து கொடுப்பதற்கு சாட்சி கையொப்பம் செய்வதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது இடது பேண்ட் பாக்கட்டில் இருந்த பர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 4 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 2 இருபது ரூபாய் நோட்டுக்கள் மற்றும் 1 பத்து ரூபாய் நோட்டு என மொத்தமாக ரூ.2,050

இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சொந்த கைச்செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.2,050 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (11) வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் மணிவேல் என்றும் தான் செல்வராஜ் என்பவர் ஸ்ரீராம் பைனான்சிற்கு MOD செய்து கொடுப்பதற்கு சாட்சி கையொப்பம் செய்வதற்காக வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது பேண்டின் வலது பின்பாக்கட்டில் வைத்திருந்த பர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 3 நூறு ரூபாய் நோட்டுக்கள், 4 பத்து ரூபாய் நோட்டுக்கள் என மொத்தமாக ரூ.340 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சொந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.340 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (12) அதன் பின்னர் வரவேற்பறைக்கு அடுத்ததாக இருந்த ஹாலில் இருந்து ஒரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் லோகநாதன் என்றும், தான் தனது அம்மா சித்ரா பெயரில் ஹவுசிங் லோன் வாங்குவதற்காக தான் வங்கியில் சர்வே எண்ணுக்கு மதிப்பறிக்கை குறித்த தகவல் தெரிந்து கொள்ள வேண்டி வந்ததாக தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் பணம் எதுவும் கொண்டு வரவில்லை என்று கூறினார். (13) அதன் பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சிவகுமார் என்றும் தான் செல்வகுமார் அட்வகேட் அலுவலகத்தில் ஜீனியர் அட்வகேட் ஆக பணிபுரிந்து வருவதாகவும் செல்வகுமார் அட்வகேட் சார்பாக செல்லத்துரை என்பவருக்கு பத்திர பதிவு செய்ய உதவியாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கட் பர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 5 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 1 இருநூறு ரூபாய் நோட்டு, 1 நூறு ரூபாய் நோட்டு, 3 இருபது ரூபாய் நோட்டுக்கள், 3 பத்து ரூபாய் நோட்டுக்கள் என மொத்தமாக ரூ.2,890 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சாப்பாட்டு செலவு மற்றும் பெட்ரோல் போட வேண்டி வைத்திருந்த தனது சொந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.2,890 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (14) பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் தினேஷ் என்றும் தான்

செல்வகுமார் அட்வகேட் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக ஆக பணிபுரிந்து வருவதாகவும் செல்வகுமார் அட்வகேட் சார்பாக செல்லத்துரை என்பவருக்கு பத்திர பதிவு செய்ய உதவியாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் அணிந்திருந்த பேண்ட் வலது பக்க பாக்கெட்டில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 2 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 2 ஐம்பது ரூபாய் நோட்டுக்கள், 1 இருபது ரூபாய் நோட்டு என மொத்தமாக ரூ.1,070 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.1,070 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (15) பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சுரேஷ் என்றும் தான் செல்வகுமார் அட்வகேட் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் செல்வகுமார் அட்வகேட் சார்பாக செல்லத்துரை என்பவருக்கு பத்திர பதிவு செய்ய உதவியாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது செல்போன் பவுச்சில் இருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.100 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (16) பின்னர் வரவேற்பறையில் இருந்த மற்றொரு பெண்ணை விசாரிக்க அவர் தனது பெயர் நந்தினி என்றும் தான் அட்வகேட் என்றும் விக்ரமன் என்பவருக்கு தானசெட்டில் மெண்ட் பத்திரம் செய்து கொடுப்பதற்காக திருப்பூரில் இருந்து வந்ததாகவும் தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் அணிந்திருந்த கோட்டின் வலது பாக்கெட்டில் இருந்து ஐநூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 50 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.25,000 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அந்த பணம் விக்ரமனின் தான செட்டில்மெண்ட் பத்திரம் எண்: 3738/2005 க்கு டாக்குமெண்டேசன் செலவு மற்றும் ஆன்லைன் பேமெண்ட்டிற்காக வைத்திருந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.25,000 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (17) அதன் பின்னர் ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் அருண்குமார் என்றும் தான் தாராபுரத்தில் அருண் டைப்

ஆபிஸ் என்ற கடையை நடத்தி வருவதாகவும் பேபி என்பவருக்கு MOD Doc.No. 3749/2025 என்ற பத்திரம் பதிவு செய்ய உதவியாக தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் அணிந்திருந்த பேண்ட்டின் வலதுபுற பின் பாக்கெட்டில் வைத்திருந்த பர்சில் இருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது அதில் 1 இருநூறு ரூபாய் நோட்டு, 3 நூறு ரூபாய் நோட்டு மற்றும் ஒரு பத்து ரூபாய் நோட்டு என மொத்தமாக ரூ.510 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.510 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. **(18)** ஹாலில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் தனது பெயர் G.நடராஜன் என்றும், தான் தாராபுரம், பீமராயர் மெயின் வீதியில் உள்ள ரங்கசாமி அட்வகேட் அலுவலகத்தில் குமாஸ்தாவாக பணிபுரிந்து வருவதாகவும் ரங்கசாமி அட்வகேட் சார்பாக புவனேஸ்வரி என்பவருக்கு கிரையப்பத்திரம் பதிவு செய்ய உதவியாகவும் மற்றும் தாராபுரம் குள்ளாயி பாளையத்தைச் சேர்ந்த துரைசாமி என்பவர் அவரது மகனுக்கு வீட்டை தானமாக கொடுத்தது தொடர்பான வேலைக்காகவும் தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அந்த நபர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் அணிந்திருந்த இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் இருந்து கத்தையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரது வலது புற பேண்ட் பாக்கெட்டில் இருந்த பணத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் இருந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்த போது 4 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள், 3 இருநூறு ரூபாய் நோட்டுக்கள், 4 நூறு ரூபாய் நோட்டுக்கள் என மொத்தமாக ரூ.3,000 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் அளித்த விளக்கம் முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் அந்த பணம் ரூ.3,000 சார்பதிவாளருக்கு கொடுக்கும் லஞ்ச பணமாக இருக்க கூடும் என்பதால் அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது வலது புற பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ஒரு 1 நூறு ரூபாய் நோட்டு, 3 ஐம்பது ரூபாய் நோட்டுக்கள், 12 இருபது ரூபாய் நோட்டுக்கள், 6 பத்து ரூபாய் நோட்டுக்கள் என மொத்தமாக ரூ.550 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணம் ரூ.550 அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இது

தொடர்பாக திரு. G.நடராஜன் என்பவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. (19) அதன் பின்னர் சார்பதிவாளர் அறைக்குள் இருந்த ஒரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் சு.விஸ்வநாதன், த/பெ.கஸ்தூரிசாமி என்றும் தனது முகவரி, கதவு எண்.67பி, அத்திபாளையம் ரோடு, கணபதி போஸ்ட், கோயம்புத்தூர் என கூறினார். அவரை விசாரித்த போது அவர் தான் நடத்தி வரும் Autodiecasting Company –யை தனது மனைவி சாந்தாமணி பெயரிள் உளள Vihrea Energy Pvt Ltd கம்பெனி பெயரில் குத்தகை ஆவணமாக பதிவு செய்ய வந்துள்ளதாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவரது பேண்டின் இடதுபுற பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகையை சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 66 ஆக மொத்தம் ரூ.33,000 மும், 100 ரூபாய் நோட்டுக்கள் 6 ஆக 600 ம், 50 ரூபாய் நோட்டுக்கள் ஒன்று ஆக ரூ.50 ம், 20 ரூபாய் நோட்டுக்கள் 2 ஆக ரூ.40 ம், 10 ரூபாய் நோட்டுக்கள் 5 ஆக 50 ம் , ஆக மொத்தம் ரூ.33,740/– இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அது ஆவண செலவுக்கும், சொந்த செலவுக்கும் வைத்திருப்பதாக கூறிய காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு பணம் ரூ.33,740/– அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. (20) மேலும் அவர் அருகில் இருந்த மற்றொரு நபரை விசாரிக்க அவர் பெயர் சாந்தாமணி என்றும் தான் சு.விஸ்வநாதனின் மனைவி என்றும் தெரிவித்தார். அவரை விசாரித்த போது அவரது பெயரில் உள்ள Vihrea Energy Pvt Ltd நிறுவனத்தின் பெயரில் குத்தகை ஆவணமாக பதிவு செய்ய வந்துள்ளதாக கூறினார். அவரிடம் இருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் வைத்திருந்த கருப்பு நிற பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் எண்ணி பார்த்த போது 500 ரூபாய் நோட்டுக்கள் 13 ஆக 6,500 ம், 100 ரூபாய் நோட்டுக்கள் 5 ஆக 500 ம் , 20 ரூபாய் நோட்டுக்கள் 2 ஆக 40 ஆக மொத்தம் ரூ.7,040/– இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அது தனது சொந்த செலவுக்காக வைத்திருந்தாக தெரிவித்த காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.7,040/– அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. (21) மேலும் அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் .ஆ.சசிகுமார், த/பெ.மாரிமுத்து என்றும், தனது முகவரி கதவு எண்.76, பார்க் சிட்டி, அப்பநாயக்கன்பாளையம், துடியலூர், கோயம்புத்தூர் என்று தெரிவித்தார். அவரைப்பற்றி விசாரித்த போது அவர் தான் விஸ்வநாதன் என்பவருடைய குத்தகை ஆவணத்தை பதிவு செய்வதற்கு சாட்சிக்காக வந்துள்ளதாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர்

சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.10/– எடுத்து ஆஜர் செய்து அந்த பணம் தனது சொந்த செலவுக்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு பணம் ரூ.10/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. **(22)** அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் செந்தில்குமார், என்றும், தனது முகவரி கதவு எண்.11/72, தாகூர் தெரு, கணபதி போஸ்ட், கோயம்புத்தூர் என்று தெரிவித்தார். மேலும் தான் விஸ்வநாதன் என்பவருடைய குத்தகை ஆவணத்தை பதிவு செய்வதற்கு சாட்சியாக வந்துள்ளதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணம் பற்றி விசாரித்தபோது அவர் சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணி பார்த்த போது 500 ரூபாய் நோட்டுக்கள் 2 ஆக 1,000 மும், 100 ரூபாய் நோட்டு 1 ஆக ரூ 100ம், 50 ரூபாய் நோட்டு 1 ஆக ரூ 50ம் ஆக மொத்தம் ரூ.1,150/– இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் சொந்த செலவுக்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.1,150/– அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. **(23)** அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் பன்னீர்செல்வம் என்றும் தனது முகவரி கதவு எண்.33, கண்ணன்நகர், தாராபுரம், திருப்பூர் என்று தெரிவித்தார். மேலும் தான் தாராபுரத்தில் யாழினி டைப் ஆபீஸை நடத்தி வருவதாகவும், பார்ட்டி விஸ்வநாதன் தன்னை அழைத்ததால் அவருடன் சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் எண்ணி பார்த்த போது 10 ரூபாய் நோட்டு 1 ஆக ரூ. 10 ம், 3 ஐந்து ரூபாய் நோட்டுக்கள் ஆக ரூ.15 ம் ஆக மொத்தம் ரூ.25/– இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது அவரது சொந்தபணம் என்று சொன்னதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. **(24)** அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் நாராயணசாமி என்றும் தனது முகவரி கதவு எண்.181/3, குமரன்நகர், தாராபுரம், திருப்பூர் என்றும் தெரிவித்தார். அவரைப் பற்றி விசாரித்தபோது அவர் தான் சிவசுப்பிரமணியம் மற்றும் செந்தமிழ்செல்வி ஆகியோருக்கு சொந்தமான செய்லாம்பாளையம் கிராமத்தில் உள்ள 14 ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கு கிரைய ஒப்பந்தம் ஆவணம் பதிவு செய்வதற்காக வந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். சாட்சிகள் முன்னிலையில் அந்த பணத்தை எண்ணி பார்த்த போது 61 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள்

ஆக ரூ. 30,500ம், 10 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் ஆக 1000 மும், ஆக மொத்தம் ரூ.31,500/– இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது தனது தோட்டத்தில் வேலை செய்யும் வேலையாட்களுக்கு கூலி கொடுப்பதற்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த பணம் ரூ.31,500/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. **(25)** அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் .ஆ.மௌனகுருசாமி என்றும் தனது முகவரி கதவு எண்.5/203, எஸ்.வல்லகுண்டாபுரம், அம்மாபட்டி போஸ்ட், உடுமலைப்பேட்டை, திருப்பூர் என தெரிவித்தார். மேலும் விசாரித்த போது தான் தனது சித்தப்பா நாராயணசாமி என்பவரது கிரைய ஒப்பந்த ஆவணம் பதிவு செய்வதற்கு சாட்சிக்காக வந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள பணம் பற்றி கேட்டபோது அவர் தனது இடதுபுற சட்டை மேல் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணி பார்த்த போது 500 ரூபாய் நோட்டுக்கள் 5 ஆக ரூ. 2,500ம் 200 ரூபாய் நோட்டுக்கள் ஒன்று ஆக 200ம், 100 ரூபாய் நோட்டுக்கள் 2 ஆக 200ம், 20 ரூபாய் நோட்டுக்கள் 2 ஆக 40 ம், 10 ரூபாய் நோட்டுக்கள் 2 ஆக 20ம் ஆக மொத்தம் ரூ.2,960/– இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது அவரது சொந்த பணம் என்று சொன்ன காரணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. **(26)** அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் நந்தினி என்றும், தனது முகவரி கதவு எண்.110, திருமலைநகர் முதல் தெரு, திருப்பூர் என்றும், தெரிவித்தார். மேலும் தான் வழக்கறிஞர் ஆனந்தகுமார் என்பவரது அலுவலகத்தில் வழக்கறிஞராக இருப்பதாகவும், இன்று தானும், வழக்கறிஞர் E.கவின் த/பெ. ஈஸ்வரமூர்த்தி என்பவருடன் சுப்பாத்தாள் என்பவரது தான செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்வதற்காக பார்ட்டியுடன் வந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் வழக்கறிஞர் கவின் என்பவரிடம் பணத்தை கொடுத்து வைத்துள்ளதாக கூறினார். வழக்கறிஞர் E.கவின் அவர்களை விசாரிக்க அவரது இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் எண்ணி பார்த்த போது 500 ருபாய் நோட்டுக்கள் 50 ஆக 25,000 இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது பார்ட்டிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணத்திற்கான ஆன்லைன் கட்டணம் மற்றும் முத்திரை தாள் கட்டணத்தை தான் கட்டியதாகவும் அதற்கான கட்டணம் பணம் ரூ.18,290/–, முத்திரை தாள் ரூ.500/– என மொத்தம் ரூ.18,610/– மற்றும் ஆவணத்தின் வில்லங்க சான்று மற்றும் பீஸ்ஸாக ரூ.6,210/– ஆக மொத்தம் ரூ.25,000/– பார்ட்டியிடம் வாங்கியதாக சொன்னார். அந்த

ஆவணத்திற்கான ரசீதை பார்வையிட்டபோது அவர் சொன்ன விளக்கம் சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ.25,000/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (27) அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் பாலசுப்பிரமணியம் என்றும் தனது முகவரி கதவு எண்.3/29, குறிச்சி நகர், வெங்கடாசலபுரம், சாத்தூர், விருதுநகர் என்றும் தெரிவித்தார். மேலும் அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்டபோது அவர் வைத்திருந்த கட்டைபையில் 500 ரூபாய் நோட்டுக்கள் 24 கட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை சாட்சிகள் முன்னிலையில் எண்ணி பார்த்த போது அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 2400 ஆக மொத்தம் ரூ. 12,00,000/– இருந்தது. அந்த பணம் குறித்து கேட்ட போது தான் திருப்பூர், தாராபுரம், கொண்டசரம்பாளையம் அண்ணாநகரைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவருக்கு சொந்தமான நஞ்சியம்பாளையம் கிராமம், தனலட்சுமிநகரில் உள்ள சைட் எண்கள் 16, 17, 27, 28 ஆகிய 4 சைட்களில் 12 செண்ட் இடத்தை தனது மகன் பாலமுருகன் பெயரிலும், தனது மருமகள் சக்திதேவி பெயரிலும் செண்ட் 1 லட்சம் வீதம் 12 செண்ட்டுக்கு ரூ.16,00,000/–க்கு பேசி கிரையம் பேசிய தொகையில் இன்று ரூ.4,00,000/–த்தை ரவிச்சந்திரன் பெயரில் தாராபுரம் எஸ்பிஐ வங்கி கணக்கிற்கு அனுப்பியதாகவும், மீதி தொகையை கிரையம் முடித்தவுடன் பணமாக கேட்டதால் தான் பணத்தை எடுத்து வந்ததாக தெரிவித்தார். அதில் ரூ.8,00,000/– வங்கியில் கடன் பெற்றதாகவும், ரூ.1,00,000/– OD கணக்கிலிருந்து எடுத்ததாகவும், ரூ.3,00,000/– சேமிப்பு தொகை என தெரிவித்தார். அந்த வங்கி ஸ்டேட்மெண்ட் ஆப் அக்கவுண்ட்ஸ் சரிபார்க்கப்பட்டது. நிலத்தை விற்பனை செய்த ரவிச்சந்திரன் ஆவணத்தில் கையொப்பம் செய்தவுடன் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அட்மிட் ஆனதால் தங்களால் பணத்தை கொடுக்க முடியவில்லை என்றும் அவரது தம்பி கதிரேசன் என்பவர் வருவதாக சொன்னதால் தாங்கள் பத்திர அலுவலகத்தில் இருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர்கள் கூறிய திரு.கதிரேசன் என்பவரை விசாரித்த போது பாலசுப்பிரமணியம் சொன்ன விளக்கத்தையே கூறினார். மேற்படி பணத்திற்கு அவர்கள் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்காக இருந்ததால் அந்த பணம் ரூ.12,00,000/– பாலசுப்பிரமணியத்திடமே சாட்சிகள் முன்னிலையில் திரும்ப கொடுக்கப்பட்டது. (28) அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் புவனேஸ்வரி என்றும் தான் முத்துசாமி என்பவரின் மனைவி என்றும், தனது சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம், பாண்டமங்கலம் கிராமம் என்றும், தான் 12ம் வரை படித்துள்ளதாகவும், தான் கடந்த 20 வருடங்களுக்கு முன்பு தாராபுரம், அலங்கியம் கிராமத்தை சேர்ந்த

திரு.ராமசாமி அவர்களின் மகன் முத்துசாமி அவர்களை திருமணம் செய்ததாகவும், அதன் பின்பு அலங்கியத்தில் தன் குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், தன் கணவர் தாராபுரம் டவுனில் பஸ் நிலையம் அருகில் முருகன் டீ வீலர் ஸ்டேண்டில் தினக் கூலி வேலை செய்து வருகிறார் என்றும், தனக்கு ஒரு மகள் கேசிகா மற்றும் மகன் கீதைப்பிரியன் என்றும், தான் திண்டுக்கல் மாவட்டம், கோட்டதொரையில் செங்கல் சூளையில் வேலைக்கு செல்வதாகவும், தன் கணவரின் நண்பர் சீலநாயக்கன்பட்டியை சேர்ந்த கருணாமூர்த்தி என்பவர் அவரது தகப்பனார் அலங்கியத்தில் வீடு கட்டி குடியிருந்ததாகவும், தற்போது கருணாமூர்த்தி உயிரோடு இல்லை என்றும், அவரது மனைவி மாரியம்மாள் அலங்கியத்தில் உள்ள வீட்டை தனது மகன் படிப்பு செலவிற்காக விற்பனை செய்வதை அறிந்து என் கணவர் அந்த வீட்டை எனது பெயரில் வாங்க திட்டமிட்டு அந்த வீட்டை ரூ.7,35,000 விலை பேசி முடித்ததாகவும், தன் கணவர் என் பெயரில் கனரா வங்கி கணக்கு எண். 1028101011621ல் இருந்து ரூ.30,000 எடுத்து மீதி ரூ.20,000 கை காசு போட்டு ரூ.50,000 13.03.2025ம் தேதி மாரியம்மாளின் மகன் கவியரசுவிடம் கொடுத்தார் என்றும், அதன் பிறகு ரூ.1,00,000 சிறு சேமிப்பில் அலங்கியம் போஸ்ட் ஆபீஸில் இருந்த பணத்தை எடுத்து கடந்த 15.03.2025 அன்று மாரியம்மாளிடம் ரொக்கமாக கொடுத்தார் என்றும், அதற்காக ரூ.1,50,000க்கு மாரியம்மாளிடம் மகன் கவியரசு நோட்டில் கையொப்பம் செய்துள்ளார் என்றும், மேலும் தனது 4 பவுன் காயினை ரு.2,40,000 க்கு அவருக்கு தெரிந்த ஒரு பையன் மூலமாக விற்று அந்த பணத்தை மாரியம்மாளுக்கு கடந்த 02.04.2025ம் தேதி கொடுத்தார் என்றும், அதற்காக மாரியம்மாளின் அண்ணன், பாராமணி நோட்டில் கையொப்பம் செய்துள்ளார் என்றும், அந்த தொகை போக மீதி தொகை ரூ.3,35,000 த்தை நான் பாராமணிக்கு கொடுக்க வேண்டும் என்றும், மேலும் எங்கள் ஊரைச் சேர்ந்த நடராஜன் என்பவர் தாராபுரம் சிவசுப்ரமணியம் பத்திர ஆபிஸில் வேலை செய்கிறார் என்றும் அவர் இன்று பத்திரம் தயார் செய்து என்னையும் என் கணவரையும் அழைத்துக் கொண்டு தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம் வந்தார் என்றும் பத்திர பதிவு முடிந்து மாரியம்மாளுக்கு கொடுக்க வேண்டிய மீதி பணம் ரூ.1,50,000 தனது கணவர் கொண்டு வந்துள்ளதாகவும் கூறினார். கவியரசு மற்றும் பாரமணி கையொப்பம் செய்த நோட்டு ஒன்று ஒப்படைத்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. **(29)** அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் முத்துசாமி என்றும் தனது சொந்த ஊர் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், அலங்கியம் கிராமம் என்றும், 12ம் வகுப்பு வரை படித்துள்ளதாகவும், தாராபுரம் டவுனில் பஸ் நிலையம் அருகில் முருகன் டீ வீலர் ஸ்டேண்டில் தினக் கூலி வேலை செய்து வருவதாகவும், தனக்கு ஒரு மகள் கேசிகா

மற்றும் மகன் கீதைப்பிரியன் ஆகியோர் உள்ளனர் என்றும், தனது மனைவி புவனேஸ்வரி கோட்டதொரை, செங்கல் சூளையில் தினக்கூலி வேலைக்கு சென்று வருகிறார் என்றும், சீலநாயக்கன்பட்டியை சேர்ந்த கருணாமூர்த்தி என்பவர் தனது நண்பர் என்றும், அவரது தகப்பனார் அலங்கியத்தில் வீடு கட்டி குடியிருந்தார் என்றும், தற்போது கருணாமூர்த்தி உயிரோடு இல்லை என்றும், அவரது மனைவி மாரியம்மாள் அலங்கியத்தில் உள்ள வீட்டை தனது மகன் படிப்பு செலவிற்காக விற்பனை செய்வதை அறிந்து தான் அந்த வீட்டை தனது மனைவி பெயரில் வாங்க திட்டமிட்டு மேற்படி வீட்டை ரூ.7,35,000 விலை பேசி முடித்ததாகவும், தான் தனது மனைவி பெயரில் கனரா வங்கி கணக்கு எண். 1028101011621ல் சேமித்து வைத்திருந்த ரூ.30,000 எடுத்து மீதி ரூ.20,000 கையில் இருந்த பணத்தை போட்டு ரூ.50,000 ஆக கடந்த 13.03.2025ம் தேதி மாரியம்மாளிடம் கொடுத்ததாகவும், மேலும் சிறு சேமிப்பில் அலங்கியம் போஸ்ட் ஆபீஸில் இருந்த ரூ.1,00,000 பணத்தை எடுத்து கடந்த 15.03.2025 மாரியம்மாளிடம் ரொக்கமாக கொடுத்ததாகவும், அதற்காக ரூ.1,50,000க்கு மாரியம்மாளின் மகன் கவியரசு நோட்டில் கடந்த 15.03.2025ம் தேதி கையொப்பம் செய்துள்ளார் என்றும், மேலும் தங்களிடமிருந்த 4 பவுன் காயினை தாராபுரத்தில் புரோக்கர் மூலம் ரூ.2,50,000க்கு விற்று மாரியம்மாளுக்கு கடந்த 02.04.2025ம் தேதி ரொக்கமாக கொடுத்ததாகவும், அதற்காக மாரியம்மாளின் அண்ணன், பாராமணி நோட்டில் கடந்த 02.04.2025ம் தேதி கையொப்பம் செய்துள்ளார் என்றும், இந்த தொகை போக மீதி தொகை ரூ.3,35,000 தான் மாரியம்மாளுக்கு கொடுக்க வேண்டும் என்றும், மேலும் தங்கள் ஊரைச் சேர்ந்த நடராஜன் என்பவர் தாராபுரம் சிவசுப்ரமணியம் பத்திர ஆபிஸில் வேலை செய்கிறார் என்றும், அவர் இன்று பத்திரம் தயார் செய்து தன்னையும் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகம் வந்தார் என்றும், பத்திர பதிவு முடிந்து மாரியம்மாளுக்கு கொடுக்க வேண்டிய பணம் மீதி பணத்தில் ஒரு தொகையாக, ஒரு கட்டுக்கு நூறு வீதம் மூன்று கட்டுக்களாக 500 ரூபாய் நோட்டுக்கள் மொத்தம் ரூ.1,50,000யை கொண்டு வந்திருந்ததாகவும், பத்திர பதிவு முடிந்தவுடன் பணம் ரூ.1,50,000யை மாரியம்மாளிடம் கொடுக்கலாம் என்று இருந்தபோது திருப்பூர் லஞ்ச ஒழிப்பு போலீசார் வந்து சோதனை நடத்தியபோது என்னிடமிருந்த ரோஸ் கலரில் இருந்த சிறிய லேடீஸ் பேக்கில் இருந்து ரூ.1,50,000யை எடுத்து ஆஜர் செய்தும், மேலும் சட்டை இடது பக்க மேல் பாக்கெட்டில் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த ரூ.4000யும் எடுத்து ஆஜர் செய்ததாகவும், மாரியம்மாளுக்கு இன்னும் ரூ.1,85,000யை தான் பத்திரம் பெற்ற உடன் அடமானம் வைத்து கொடுக்கலாம் என்று நினைத்திருந்ததாகவும் கூறினார். அவர் சொன்ன விளக்கம் ஏற்று

கொள்ளத்தக்கதாக இல்லாததால் பணம் ரூ.1,50,000யை அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சொந்த செலவிற்கு வைத்திருந்த ரூ.4,000 அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. (30) அதன் பிறகு அங்கிருந்த மற்றொரு நபரை அழைத்து விசாரிக்க அவர் தனது பெயர் மாரியம்மாள் என்றும், தான், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சின்னக்காம்பாளையம், சீலநாயக்கன்பட்டி, குடித் தெருவில் தனது மகன் திரு.கவியரசு, மகள் செல்வி.பிரியதர்ஷினி ஆகியோருடன் குடியிருந்து வருவதாகவும், தான் தாராபுரத்தில் விவசாய கூலி வேலை செய்து வருவதாகவும், தனது கணவர் கருணாமூர்த்தி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு நோய்வாய் பட்டு இறந்துவிட்டார் என்றும், தாராபுரம் அலங்கியத்தில் தனது கணவருக்கு சொந்தமான பூர்வீக சொத்து வீட்டுடன் கூடிய 2 சென்ட் பூமியை தன் மகன் படிப்பிற்காக விற்க முடிவெடுத்து தனது கணவரின் நண்பர் அலங்கியத்தை சேர்ந்த பாலா என்கிற முத்துசாமி அவர்களுக்கு ரூ.7.5 லட்சத்துக்கு விற்பனை செய்வதற்காக வாய்மொழியாக தங்களுக்குள் முடிவெடுத்து முதல் தவணையாக பணம் ரூ.2,00,000/–யை 26.04.2025 சனிக்கிழமையன்று தனது மகன் கவியரசு முன்னிலையில் பெற்றுக் கொண்டதாகவும், மேலும் 29.04.2025ம் தேதி மீதி 5.5 லட்சத்தை தாராபுரத்தில் உள்ள கனரா வங்கியில் போடுவதாக தனது வங்கி சேமிப்பு கணக்கு எண் 1243101036748யை கொடுத்து போட்டு விட சொன்னதாகவும், நேற்று இரவு நேரமாகிவிட்டதால் இன்று 30.04.2025ம் தேதி மீதி பணத்தை தன்னிடம் தனது தம்பி பாலசுப்பிரமணியம் முன்னிலையில் கொடுத்தார்கள் என்றும் தெரிவித்தார். மேலும் திரு. முத்துசாமி தனக்கு தர வேண்டிய பாக்கி பணம் எதுவும் இல்லை என்றும், தான் பத்திர பதிவு செய்ய கையொப்பமிட தனது மகன் கவியரசு மற்றும் மகள் பிரியதர்ஷினியுடன் பத்திர பதிவு அலுவலகம் வந்திருந்ததாகவும் தெரிவித்தார். பின்னர் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் சார்பதிவாளரை அழைத்துக் கொண்டு அலுவலகத்தின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அலுவலர்களின் இரு சக்கர வாகனங்களில் சோதனை செய்தபோது அங்கு பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் சார்பதிவாளரை அழைத்துக்கொண்டு அலுவலகத்தின் அறைக்கு வந்தும், அதன் பின்னர் சார்பதிவாளர் மற்றும் சாட்சிகளுடன் அலுவலகத்தின் முதல் தளத்திற்குச் சென்று மேற்கு பார்த்துள்ள ஆவண பதிவறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு பணமோ பொருளோ எதுவும் காணப்படவில்லை. தாராபுரம் சார்பதிவாளர் அலுவலகமானது அரசுக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அலுவலக சுற்றுச் சுவரில் நுழைந்தவுடன் வடக்கு பக்கமாக

உள்ள காலி இடத்தில் பொதுமக்கள் அமருவதற்கு இருக்கைகள் போடப்பட்டுள்ளது. அதேபோல் அலுவலகத்தில் நுழைந்தவுடன் பொதுமக்கள் அமருவதற்கென்று 21 x 10 அளவில் வரவேற்பு அறை உள்ளது. அதில் கிழக்கு மற்றும் மேற்கு பார்த்தவாறு இருக்கைகள் போடப்பட்டுள்ளன. அந்த அறையின் மேற்கே அலுவலக பிரதான அறையில் நுழைந்தவுடன் மேற்கே கிழக்கு பார்த்தவாறு சார்பதிவாளர் இருக்கை அமைந்துள்ளது. சார்பதிவாளர் இருக்கைக்கு தென் கிழக்கே வடக்கு பார்த்தவாறு உதவியாளர் இருக்கை ஒன்றும், அதன் கிழக்கே சுமார் 4 அடிகள் தொலைவில் வடக்கு பார்த்தவாறு உதவியாளர் இருக்கை ஒன்றும், அறையின் வடக்கு பக்கம் கணினி அறையும் வடமேற்கே உதவியாளர் அறையும் உள்ளது. சார்பதிவாளர் இருக்கைக்கு வடமேற்கு மூலையில் முதல் தளத்திற்குச் செல்லும் படிக்கட்டும் உள்ளது. மேற்படி திடீர் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/எதிரிகள் உரிய விளக்கம் அளிக்காததாலும், அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும் அனுகூலமாகவோ, பிரதிபலனாகவோ, அவர்களால் பெறப்பட்டிருக்ககூடும் என்றும் எதிரிகள் கொண்டு வந்திருந்த தொகை சார்பதிவாளர் திருமதி.M.உமாமகேஸ்வரி மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்ககூடும் என்றும் சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும் இயக்குனர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களின் வாய்மொழி உத்தரவு பெற்று மேற்படி எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் மீது இன்று 01.05.2025 ம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/2025/TPR u/s.7 of the Prevention of Corruption (Amedment) Act, 2018 r/w 106, Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட செயல் முறை நடவடிக்கையின் அசல், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை மாண்பமை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

01/05/2025

(N.K.ரவிச்சந்திரன்)
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருப்பூர்.